கிளைக்கதையை அல்லது நூலின் ஒரு பகுதியை விவரித்துப் பங்களிப்பர். விளைவு ஒரு முழுமையான தொடர்ச்சியான வீரச்செயல் கதையாகும். அதனை ஒரு பன்மொழி கதையாக ஆக்குதற்கு, முன்னரே முடிவுசெய்தபடி சில கிளைக்கதைகள் மாணவர்களின் பிறந்த நாடுகளில் நடைபெறுவதாகவும், அங்கு பேசப்படும் மொழியில் எழுதப்பட்ட சில சொற்கள் உள்ளடக்கப்படும் (எ.கா. "காலை வணக்கம்", "உங்களுக்கு நன்றி", என்பன)

---

### 3. பன்மொழிச் சுவரொட்டி அல்லது மாணவர் சஞ்சிகை

3 - 4 ஆம் தரம் அதற்கு மேல்

நீண்ட காலமாகப் பல வடிவிலான மாணவர் செய்தித்தாள்கள் பரவலாக இருந்தன. இது செய்திப் பலகைகளையும் மிக அண்மைக் காலங்களில், எண்முறை வழித் தொடர்பாடலையும் உள்ளடக்குவதாகும். பெரிய நகரச் செய்தித் தாள்கள் பரவலான குடிபெயர் மொழிகளில் தலைப்புகளை உள்ளடக்குவதுபோல, இவை பல மொழிகளை உள்ளடக்குவதற்கு எளிதாக விரிவாக்கலாம் (அல்லது பெரிய குடிபெயர் மொழிகளில் ஒரு மொழிபெயர்ப்புத் தாளை வெளியிடலாம்.)

மாற்று 1: பள்ளி மொழியை விட பிறமொழிகளில் எழுதப்பட்ட தாளின் தலைப்புகளுக்கான பங்களிப்புகள் தாளில் சேர்த்துக்கொள்ளப்படும். எனினும், எல்லா வாசிப்பாளர்களின் நன்மைக்காக எழுத்துரு குறைந்த அளவு பள்ளி மொழியில் சுருக்கப்படவேண்டும்.

மாற்று 2: வெவ்வேறு மொழிகளில் அறிவிப்பதற்குச் சிறப்பான தலைப்புகள் ஆக்கப்படவேண்டும் (எ.கா. தாயகத்தின் நிகழ்வுகள் தொடர்பாக). இங்கு கூட, பள்ளி மொழியில் ஒரு சிறிய சுருக்கம் வழங்கப்படவேண்டும்.

---

### 4. கருத்திட்டக் கிழமைகள் அல்லது கண்காட்சிகள் பின்வருவனபோல், "எங்கள் பண்பாடுகள்", "நாம் எங்கிருந்து வருகிறோம்" "சிறந்த சுற்றுலா நாடுகள்" "எங்களது மொழிகள்", முதலியன.

4 ஆம் தரம் அதற்கு மேல்

வழமையான கற்பித்தல் மட்டுமல்லாமல் மாணவர்களின் தேவை அல்லது ஆர்வத்திற்கேற்ப இது போன்ற கருத்திட்ட செயல்பாடுகள் செய்வது முக்கியமாக பன்மொழி, பல்கலாச்சாரத்தில் வாழும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

ஒரு சிறப்பு கருத்திட்டக் கிழமையை ஒழுங்குபடுத்தல்/நடத்துதல், அல்லது குறிப்பிட்ட ஒரு தலைப்பில் பல்வேறு வகுப்புகளை உள்ளடக்கி, மாணவர்களின் பன்மொழி மற்றும் பல்பண்பாட்டு வளங்களைப் பயன்படுத்திய கருத்திட்ட எண்ணம் பல பள்ளிகளில் வரவேற்கப்படவேண்டியதாகும். பெரும்பகுதிக் கல்விக்கும் பாரம்பரிய வகுப்புகளுக்கும் இடையேயான கூட்டுறவுக்கேற்ற வழிகள் எடுத்துரைப்புகளை உருவாக்குதற்கும், பல்வேறு நாடுகளில் உல்லாசப்பயணத் தொழில் துறைக்கான சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் அல்லது விளம்பரங்களை வடிவமைத்தலுக்கும் துணைசெய்தலை உள்ளடக்கும்.

# 10.1 மற்றும் 12 ஐயும் பார்க்க

---

### 5. பலமொழியிலும் சமையல் செயல்முறைகளை சேகரித்தல்

2 - 3 ஆம் தரம் அதற்கு மேல்

குறிப்பாக வழமையான கல்வியும் வீட்டுப் பொருளியல் வகுப்புகளும் இணைந்த பல்வேறு நாடுகளிலுமிருந்து மரபுவழி செய்முறைகளின் ஒரு பன்மொழித் திரட்டை உருவாக்கலாம். இதனை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் எளிமையாக நிறைவேற்றலாம், அதனூடாக முதல் மொழியிலுள்ள செய்முறைகளை பெற்றோர்கள் அல்லது சிறப்பு மொழி வகுப்புகளுடன் இணைந்து விரிவாக்கலாம். இயல்பாக, எல்லா செய்முறைகளும் பள்ளி மொழியிலும் மொழிபெயர்க்கப்படவேண்டும். கருத்திட்டத்தை நிறைவுசெய்ய, முடிந்தவரை ஒரு பெற்றோர் மாலை, ஒரு பள்ளி விழா, அல்லது ஒரு பல்பண்பாட்டுக் கருத்திட்ட கிழமையுடன் இணைந்து ஒரு பன்னாட்டு உணவு மற்றும் சமையல் நிகழ்வினை நிகழ்த்தலாம்.